## சுருக்கம்

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை – ஊதிய மானியம் வழங்கும் திட்டம் – மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் கீழ் புதிதாக உள்ள 34 தன்னார்வ தொண்டு நிறுவனங்களில் பணிபுரியந்துவரும் சிறப்பாசிரியர்கள் மற்றும் தசைப் பயிற்சியாளர்களுக்கு ஊதிய மானியம் வழங்குதல் – நிதி ஒப்பளிப்பு செய்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

### மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.ந–1 . 2)த் துறை

அரசாணை (நிலை) எண். 22

நாள்: 15.07.2022
சுபகிருது, ஆனி – 30
திருவள்ளுவர் ஆண்டு, 2053.

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண் 48, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை, நாள் 16.07.2010.
2. அரசாணை (நிலை) எண் 13, மாற்றுத் திறனாளிகள் நலத் (மா.தி.ந–2.1) துறை, நாள் 04.05.2018.
3. மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநரின் கடித ந.க. எண் 4703/சி.ப.2/2018, நாள் 03.03.2022 மற்றும் 10.05.2022.

-----

ஆணை:

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், மனவளர்ச்சி குன்றியோருக்கு கற்பிக்கும் 200 தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலமாக செயல்படும் சிறப்புப் பள்ளிகளில் பணிபுரியும் சிறப்பு ஆசிரியர்கள் மற்றும் தசைப் பயிற்சியாளருக்கான ஊதிய மானியம் வழங்கும் திட்டத்தில், ஒரு பள்ளிக்கு ரூ.1.80 இலட்சம் வீதம், 2010–2011ஆம் நிதியாண்டிற்கு மொத்தம் ரூ.3.60 கோடியினை (ரூபாய் மூன்று கோடியே அறுபது இலட்சம் மட்டும்) ஊதிய மானியமாக ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2018–2019ஆம் நிதியாண்டு முதல் ஆண்டுதோறும் மாற்றுத் திறனாளிகள் நலத் துறையினால் செயல்படுத்தப்படும் குறிப்பிட்ட சில திட்டங்களுக்கு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகைக்கு மிகாமல் தொடர்ந்து செயல்படுத்திட மாற்றுத் திறனாளிகள் நல ஆணையருக்கு அதிகாரம் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநரின் கடிதத்தில், புதிதாக உள்ள 34 தன்னார்வ தொண்டு நிறுவனங்களில் பணிபுரியும் 100 சிறப்பாசிரியர்கள் மற்றும் தசைப் பயிற்சியாளர்களுக்கு ஊதிய மான்யம் வழங்குவதற்கு 2021–2022 மற்றும் 2022–2023 ஆகிய நிதியாண்டுகளுக்கு தேவைப்படும் செலவினத் தொகையான ரூ.1,68,00,000/–ஐ, 2022–2023ஆம் நிதியாண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் "2235 02 101 MG 309 01" நடப்பு செலவுக்கான உதவித் தொகை என்ற கணக்குத் தலைப்பின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டு, செலவினங்கள் போக மீதமுள்ள தொகையிலிருந்து இச்செலவினத்தை மேற்கொள்ள இயலும் எனத் தெரிவித்து, உரிய அனுமதி ஆணை வழங்குமாறு அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநரின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்த அரசு, மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநரகத்தின் கீழ் தன்னார்வ தொண்டு

(த.பி.பா.)

நிறுவனங்களில் பணிபுரிந்துவரும் சிறப்பாசிரியர்கள் மற்றும் தசைப் பயிற்சியாளர்கள் என 783 நபர்களுக்கு ஏற்கெனவே ஊதிய மானியம் வழங்கப்பட்டுவரும் நிலையில், மேலும் கூடுதலாக இணைப்பு-I-ல் உள்ள 34 தன்னார்வ தொண்டு நிறுவனங்களில் பணிபுரியும் 100 சிறப்பாசிரியர்கள் மற்றும் தசைப் பயிற்சியாளர்களுக்கு ஊதிய மானியம் வழங்க ரூ.1.68 கோடியினை, ஆண்டு தொடர் செலவினமாக ஒப்பளிப்பு செய்து இவ்வாணை வெளியிடப்படும் நாள் முதல் ஊதிய மானியம் வழங்க மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநருக்கு அனுமதியளித்து ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி-4ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்:-

"2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் - 02 சமூக நலன் - 101 மாற்றுத் திறனாளிகள் நலன் - பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் II மாநில திட்டம் - MG மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான சிறப்பு நிலையங்களுக்கான அரசு புகழ்வாய்ந்த அரசு சாரா அமைப்புகளுக்கு நிதியுதவி - 309 உதவித் தொகை - 01 நடப்புச் செலவுக்கான உதவித் தொகை"

(IFHRMS: த.தொ.கு. "2235 02 101 MG 309 01)

6. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சாரா எண்.28963/நிதி(சந)/2022, நாள் 11.07.2022-இன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. ஆனந்தகுமார்,
அரசு செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர், சென்னை-5.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள்.
மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர், சென்னை-5. (வழி)
மாநிலக் கணக்காயர், சென்னை-18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-35.
மாநில கணக்காயர் சென்னை-18.
நகல்
செயலரின் முதுநிலை முதன்மை தனிச் செயலர்,
மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சென்னை-9.
நிதித் (ச.ந)துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர் 15/07/2022
15/7/22

## இணைப்பு-I

**அரசாணை (நிலை) எண்.22, மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந-1(2))த் துறை, நாள்.15.07.2022**

| Sl. No. | District | Name of the Special School | No. of students in studying in School | No. of Special Educators / Therapist | Remarks |
|---|---|---|---|---|---|
| 1. | Chennai | Opportunity School for the Intellectual Disabled, Vepery, Chennai. | 120 | 3 | |
| 2. | | Swabodhini School for Special Children, Thiruvanmiyur | 60 | 3 | |
| 3. | | Avvi Kapagam Special School for Intelectual Disabled, Thiruvottiyur High Road, Chennai. | 48 | 3 | Applied for Registration & Renewal |
| 4. | | Asha Centre for the Disabled, Egmore | 48 | 2 | |
| 5. | | Dr. Durgabai Deshmukh School cum Training Centre for Mentally Retarded, Chennai-28. | 32 | 3 | |
| 6. | | V.Exel Education Trust, Special School for Intellectual Disabled, Mandaveli | 53 | 3 | Applied for Registration & Renewal |
| 7. | Pudukottai | Blossom Special School for the Intellectual Disabled and Rehabilitation Home, Machuvadi, Pudukottai. | 26 | 3 | |
| 8. | Namakkal | New Life Education Special School for Mentally Challenged, Mohanur, Namakkal. | 24 | 3 | |
| 9. | | Sri Kambathukarar Special School for Intellectual Disabled, Komarapalayam, Namakkal | 24 | 3 | |
| 10. | Thoothukudi | Mikkael Rehabilitation Centre for Differently Abled, Sattankulam, Thoothukudi | 40 | 3 | |
| 11. | Salem | Emmys MR School, Retiyur | 30 | 3 | |
| 12. | Trichy | Synthika Special School for Intellectual Disabled Trichy Main Road, Vellanur Post, Lalgudi Taluk, Trichy. | 30 | 3 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 13. | | Agape Special School for Intellectual disabled, 53, Ahamed Colony, Ramalinga Nagar, Uriyur. | 30 | 3 | |
| 14. | | Phoneix Special School & Centre, Kavary Nagar, West Prattiyur, Trichy. | 32 | 3 | Applied for Registration & Renewal |
| 15. | Chennai | Mathuram Narayana | 27 | 3 | |
| 16. | Thoothukuid | Vidyaprakasam School for MR Kovilpatti | 44 | 3 | |
| 17. | Trichy | Annai Special School for Intellectual disabled Children | 25 | 2 | Applied for Registration & Renewal |
| 18. | Villupuram | Sristi Special School for intellectual Disabled | 54 | 3 | |
| 19. | | Annai Special School for ID, Valavanur | 25 | 3 | |
| 20. | | Clunny Special School for ID | 20 | 3 | |
| 21. | Dindigul | Udayam Special School for ID | 19 | 3 | |
| 22. | Dharmapuri | Vidiyal Special School for ID | 19 | 3 | |
| 23. | Vellore | Aathichudy Special School for ID (SWASTIK TRUST) | 21 | 3 | Applied for Registration & Renewal |
| 24. | Kanchipuram | Paul Brand Special School for ID | 25 | 3 | Applied for Registration & Renewal |
| 25. | Cuddalore | Vasantham Intellectual Special care for School and Home (Run by Annai Teresa Disability Eduction and Social Welfare Trust) Abathranapuram Bust Stop, Near Panruti Main Road, Vadalur, Kurinipadi Taluk, Cuddalore | 50 | 3 | |
| 26. | Kanniyakumari | Mother Therasa Special School & Charitable Trust, 8-39C, Kovilanvilai, Azhaganpari Post. | 30 | 3 | |
| 27. | | Nanjil Oasis Special School, 852 A/1, Melasoorankudy Road, Konam Post, Nagarcoil | 35 | 3 | |
| 28. | Tirunelveli | Rucode India Mentally Retarded Special School, 1/12B, Pazhavoor, Tirunelveli | 48 | 3 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 29. | Trichy | Trichy Special School Trust for the Intellectual Challenged and Autism, No.97, Indian Bank Colony 4rd Street, K.K.Nagar, Trichy-2. | 29 | 3 | |
| 30. | | Elite Special School for the Intellectually Disabled Children, No.24, Seventhi Pillaiyar Koil Street, Woraiyur, Trichy-620003. | 48 | 3 | |
| 31. | | Agachevi Transitional School for Hearing Impaired, No.10/11, Jaya Nagar, 2nd Street, LIC Colony, K.K.Nagar, Trichy-21. | 21 | 3 | |
| 32. | | Jaya Special School & Service Centre, Thiruverumbur Village, No.12/16, IDIR Nagar, Main Road, Malaikovil, Trichy | 32 | 3 | |
| 33. | | Sigul Special School for Mentally Retarded | 51 | 3 | |
| 34 | Tirunelveli | TSM Mentally Retarded Differently Abled Special School, Punniyapuram, Puliangudi – 627855. | 32 | 3 | |
| | | Total | 1252 | 100 | |

இரா. ஆனந்தகுமார்,
அரசு செயலாளர்.

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்
15/7/22
15/07/22